ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

# e-Newsletter

Vol 02: No: 05 - June 2012

Website: www.pccsl.lk
E-mail: pccsl@pccsl.lk
Tel: +94 115 353635
Fax: +94 115 335500

## ஆறு மாத காலப்பகுதிக்குள் பத்திரிகைகளுக்கு எதிராக 86 முறைப்பாடுகள்

கடந்த ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையான 06 மாத கலப்பகுதிக்குள் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு 86 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகள் இலங்கையில் வெளிவரும் மும்மொழிகளிலுமான பத்திரிகைகளுக்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாடுகளாகும். இவற்றில் 58 முறைப்பாடுகளே செல்லுபடியாகத்தக்க முறைப்பாடுகளாக இருந்துள்ளன. இந்த 58 முறைப்பாடுகளில் 23 முறைப்பாடுகள் நல்லிணக்க அடிப்படையில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் சிங்கள மொழிமூல பத்திரிகைகளுக்கு எதிராக 34, தமிழ் மொழிமூல பத்திரிகைகளுக்கு எதிராக 27 மற்றும் ஆங்கில மொழிமூல பத்திரிகைகளுக்கு எதிராக 14 முறைப்பாடுகள் என்ற அடிப்படையில் இம்முறைப்பாடுகள் அமைந்துள்ளன.

இத்தகைய முறைப்பாடுகளில் அதிகமானவை உண்மைக்குப் புறம்பான தகவல்களை அடிப்படையாகக் கொண்டும் உறுதிப்படுத்தப்படாத செய்தி மூலங்களின் அடிப்படையிலும் பிரசுரிக்கப்பட்ட செய்திகளுக்கு எதிரானவையாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த முறைப்பாடுகளுள் 11 முறைப்பாடுகள் பத்திரிகைகள் அல்லாத ஊடகங்களுக்கு எதிராக செய்யப் பட்டவைகளாகும். அத்துடன் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யாமல் நேர-டியாக பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டு தீர்க்கப் பட்டவைகளாக 201 திருத்தங்கள் அல்லது விளக்கங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவை சிங்கள மொழிமூல பத்திரிகைகளில் 158, தமிழ் மொழி மூலம் 05 மற்றும் ஆங்கில மொழி மூலம் 38 என்ற அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டவைகளாகும்.

இந்நாட்டில் வெளிவருகின்ற பத்திரிகைகளால் பிரசுரம் செய்யப்படுகின்ற செய்திகள். கட்டுரைகள் மற்றும் புகைப்படங்கள் என்பவற்றால் பாதிக்கப்படும் பொதுமக்கள், அதிகாரிகள், நிறுவனங்கள் அல்லது சம்பந்தப்பட்ட எவரும் இலகுவான முறையில் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக தொலைபேசி, மின்னஞ்சல் அல்லது பெக்ஸ் மூலமாக முறைப்பாடுகளை செய்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

## மூன்றாம் தரப்பு முறைப்பாடுகளை ஏற்கும் வகையில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ஒழுங்கு விதிகளை தளர்த்துகின்றது

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பத்திரிகைப் பிரசுரங்களால் நேரடியாக பாதிப்புக்குள்ளாகாமல் மறைமுகமாக பாதிக்கப்படக்கூடிய மூன்றாம் தரப்பினரால் செய்யப்படும் முறைப்பாடுகளையும் ஏற்றுக்கொள்ள தீர்மானித்திருக்கின்றது. அதற்கு வசதியளிக்கும் வகையில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளில் திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது.

பத்திரிகைத் துறையினருக்கான சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை பொறிமுறை தொடர்பாக 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08 ஆம் திகதி வியாழக் கிழமை நிறைவடைந்த தேசிய மாநாட்டின் நிறைவில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை இந்த அறிவித்தலை விடுத்தது. இந்த மாநாடு 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07-08 ஆம் திகதி வரை இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஏற்கனவே இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முறைப்பாட்டு ஒழுங்குவிதிகள் மூன்றாம் தரப்பு முறைப்பாடுகளை ஏற்பதை அனுமதித்திருக்கவில்லை.

ஆனாலும் முன்னைய சந்தர்ப்பம் ஒன்றில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாகா குமாரதுங்கவின் குழந்தையொன்று தொடர்பாக வாராந்த பத்திரிகையொன்று பிரசுரித்திருந்த செய்திக்கு எதிராக அவரின் செய்தித் தொடர்பு அதிகாரியால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டை மூன்றாம் தரப்பு முறைப்பாடாக இந்த ஆணைக்குழு ஏற்றுக்கொண்டு முன்னெடுத்ததை இங்கு உதாரணமாக குறிப்பிட முடியும்.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையானது அதன் செயற்பாட்டு பரப்பை விஸ்தரிக்கும் நோக்கில் எடுத்துள்ள இந்த நடவடிக்கைக்கமைவாக முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகமும் குறைகேள் அதிகாரியுமான சாம் விஜேசிங்கவின் தலைமையின் கீழ் இயங்கும் முரண்பாட்டுத் தீர்வுக்குழு இவ்வாறான மூன்றாம் தரப்பு முறைப்பாடுகளை குறிப்பிட்ட விடயப் பரப்பின் அடிப்படையில் முன்னெடுப்பதற்கு தீர்மானித்திருக்கின்றது.

அதன்படி பின்வரும் முக்கிய காரணிகளின் அடிப்படையில் இந்த மூன்றாம் தரப்பினரால் செய்யப்படும் முறைப்பாடுகளை கவனத்தில் எடுப்பதென்று ஆணைக்குழுவின் செயலாகம் முடிவு செய்திருக்கின்றது.

- சுற்றாடல் நடவடிக்கை தொடர்பான குழு
- கால் நடை நலன்புரி குழுக்கள்
- சிறுவர்கள் சார்பாக வயது வந்தவர்கள்
- விபத்து ஒன்றால் பாதிக்கப்பட்டவர்களின் நேரடி குடும்ப அங்கத்தவர்கள்
- பிரசுரம் ஒன்றால் பாதிக்கப்பட்ட ஒருவரின் எழுத்து மூலமான அங்கீகாரத்தைப் பெற்ற ஒருவர்

மிகவும் தாக்கமுள்ள அடிப்படையில் சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்ற இங்கிலாந்து, ஜேர்மனி, பொஸ்னியா ஹெசகோவினா, ஸ்கன்டினேவிய நாடுகள் என்பவற்றில் இந்த அடிப்படையில் மூன்றாம் தரப்பினரால் சமர்ப்பிக்கப்படும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தெற்காசியாவில் பத்திரிகைத் துறையினருக்கான சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக்கோ வையை முன்னெடுக்கும் ஒரே நாடு என்ற பெருமையை இலங்கை பெறுகின்றது. இந்த ஆணைக்குழு 2003 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதாகும். ஆணைக்குழு நிறுவப்பட்ட நாளில் இருந்து இன்று வரையில் 1050 முறைப்பாடுகள் வரையில் பெறப்பட்டு

தொடர்ச்சி 04ம் பக்கம்...

# இங்கிலாந்து பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக்கோவையில் அவமதித்தல் தொடர்பான பிரிவுக்கு திருத்தம் முன்வைக்கக் கோரிக்கை

இங்கிலாந்தில் வெளிவருகின்ற “சன்டே மிரர்” என்ற பத்திரிகை செய்தி வெளியீட்டில் அந்நாட்டின் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பத்திரிகைத்துறை சார் ஒழுக்கக்கோவயின் தொந்தரவு உண்டுபன்னுதல் தொடர்பான பிரிவு 4 யை மீறவில்லை என்று இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தீர்ப்பளித்திருக்கின்றது. இங்கிலாந்தின் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் அன்ரூ ரொபதன் செய்திருந்த முறைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்திய ஆணைக்குழு இந்த தீர்ப்பை வழங்கியிருக்கின்றது. “சன்டேமிரர்” பத்திரிகை பாதுகாப்பு அமைச்சு தொடர்பாக தவறான முறையில் கட்டுரை யொன்றை பிரசுரிப்பதற்கு முன்னர் அப்பத்திரிகையின் செய்தியாளர் ஒருவர் காரில் தம்மையும் தமது குடும்பத்தினரையும் பின் தொடாந்ததாகவும் இவ்விடயமானது தம்மையும் தமது குடும்பத்தாரையும் மிகுந்த தொந்தரவுக்கு உற்படுத்திய விடயம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சின் அணுப் பரிசோதனையின் சுகாதாரப் பாதிப்பு தொடர்பான ஆராச்சி பற்றி உத்தியோகபூர்வமாக தகவல் வெளியிட முன்னர் இப்பத்திரிகை பொறுப்பற்ற முறையில் தகவல் வெளியிட்டதாகவும் இது இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுக்கக் கோவையை மீறும் செயல் என்றும் சுட்டிக் காட்டப் பட்டிருக்கின்றது. அதேநேரம் பத்திரிகை இவ்விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் குறித்த விடயம் பற்றி உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சை தொடர்பு கொண்ட போது முடியாததாகையால் குறித்த அதிகாரியைச் சந்திக்கும் முயற்சியை மேற்கொண்டதாகவும் தெரிவித்திருக்கின்றது. இருந்த போதும் செய்தியை உறுதி செய்து கொள்வது அல்லது அது தொடர்பாக கருத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இவ்வாறு தனிப்பட்ட முறையில் குறிப்பிட்ட அதிகாரியின் வாகனத்தைப் பின்தொடர்வது, இடைஞ்சல் எற்படுத்துவது என்பன எந்த வகையில் பொருந்தும் என்பது தொடர்பாக ஆணைக்குழுவின் கவனம் திரும்பியிருப்பதோடு இந்த விடயத்தில் ஒழுக்கக்கோவையின் பிரிவு திருத்தம் செய்யப்பட வேண்டியது தொடர்பாக கவனம் திரும்பியிருக்கின்றது.

---

# தகவல் பெறும் உரிமை என்பது என்ன?

தகவல் சுதந்திரம் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது?
தகவல் ஆனது ஜனநாயகத்தின் ஒட்சிசன் போன்றதாகும். மக்கள் அவர்கள் வாழும் சூழலில் என்ன நடைபெறுகின்றது என்பதை அறியாத நிலையில் அல்லது யார் அவர்களைக் கட்டுப்படுது கின்றார்கள் என்பதை அறியாத நிலையில் வாழ்வதாயின் அவர்களால் சமூக செயற்பாட்டில் முழுமையானதும் அர்த்தமுள்ளதுமான பங்களிப்பை வழங்க முடியாது. தகவல் என்பது வெறுமனே மக்களுக்கு மட்டும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைவதில்லை. அது நல்லாட்சியின் முக்கியமானதும் சிறப்புப் பன்புமாகும். மோசமான அரசாங்கத்திற்கு அதன் நீடிப்புக்கு அனைத்தையும் இரகசியமாக வைத்திருப்பதையே விரும்புகின்றது. இவ்வாறான நிலை அதன் இயலாமையின் வெளிப்பாடாக அமைவதோடு வீன் விரயமாகவும் அமைகின்றது. ஆனால் தகவல் பெறும் உரிமையானது மக்களை விழிப்படையச் செய்வதோடு சுறுசுறுப்பாகவும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து அறிவைப் பெறுவதற்கும் காரணமாக அமைகின்றது. (பிரிவு 19)

தகவல் பெறும் உரிமை என்பது என்ன? **(RTI)**
தகவல் பெறும் உரிமையானது இலங்கையின் அரசில் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மனித அடிப்படை உரிமைகளுல் ஒன்றாகும். இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் பிரிவு ஐஐஐ இன் 14 (i) (a) மூலம் இந்த உரிமை உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. இந்த பிரிவின் அடிப்படையில் எல்லா மனிதர்களுக்கும் கருத்துக்களை கொண்டிருப்பதற்கும், அக்கருத்துக்களை வெளியிடவும் பிரசுரிப்பதற்கும் உரிமை இருக்கின்றது.

மனிதர்கள் அனைவரும் ஏதாவதொரு வழியில் அரசாங்கத்திற்கு வரி செலுத்தக்கூடியவர்களாகவே உள்ளனர். அதனால் அந்த வரியாக செலுத்தக்கூடிய பணத்திற்கு என்ன நடக்கின்றது என்பதை அறிவதற்கான உரிமை பெற்றுள்ளர். தகவல் அறிவதற்கான உரிமையானது அவர்களது பணத்திற்கு என்ன நடக்கின்றது, அப்பணம் எதற்காக எவ்வாறு செலவிடப்படுகின்றது, அதனால் கிடைக்கக்கூடிய விளைவு எப்படிப்பட்டது என்பதை அறிவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது.

தகவல் பெறுவதற்கான சுதந்திரம் அடிப்படை உரிமையென்றால் அந்த உரிமையை வழங்குவதற்கான சட்டம் எமக்கு எதற்காக?
உள்ளூராட்சி நிர்வாகத்தால் வீதிகளை பழுது பார்ப்பதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது, அந்தப் பணம் எவ்வாறு செலவிடப்பட்டது, அதற்காக மூலப்பொருட்களை வழங்கியவர்கள் யார்? பழுது பார்க்கும் பணி சரியான முறையில் திருப்திகரமான அடிப்படையில் நிறைவு செய்யப்பட்டதா என்ற கேள்விகளுக்கு விடை தேட முயற்சி செய்தால் அதற்காக பதிலைப் பெற முடியாது. அதனால் இவ்வாறான விடயங்களில் நடப்பது எதன்ன என்பதை அறிந்து கொள்வதற்காக எமக்கு அதற்கான உரிமை தேவைப்படுகின்றது.

தகவல் பெறும் உரிமை தொடர்பான சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா?
2001 - 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதவியில் இருந்த ஐ.தே.முன்னணி அரசாங்கம் தகவல் பெறும் உரிமைச்சட்டம் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபரின் தலைமையில் ஒரு குழுவை நியமித்திருந்தது. இந்தக் குழுவில் ஊடகத்துறை சார்ந்த வல்லுனர்கள், சட்ட வல்லுனர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள். கல்விமான்கள், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் என்று பலதரப்பட்டவர்களும் இடம்பெற்றிருந்தனர். அதன்படி தகவல் பெறும் சட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டதாயினும் அவசரமாக பொதுத் தேர்தல் நடைபெற்றதால் அச்சட்டப் பிரேரனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாமல் போய்விட்டது.

2010 ஆம் ஆண்டு அப்போதைய நீதி அமைச்சராக இருந்த மிலிந்த மொரகொடவால் இந்த பிரேரனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாயினும் அதுவும் வெற்றியளிக்கவில்லை

2010 ஆம் ஆண்டு ஜுலை மாதம் அந்த பிரேரனையை தனி நபர் பிரேரனையாக எதிர்க் கட்சி தலைவரால் மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முயற்சி எடுக்கப்பட்ட போதும் அது பிரேரனைப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டோடு முடிவடைந்துவிட்டது. அத்துடன் இந்த பிரேரனையை எதிர்க்கட்சித் தலைவரால் இவ்வாரானதொரு சட்ட மூலத்தை தனி நபர் பிரேரனையாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது என்று பாராளுமன்ற செயலாளர் நாயகம் நிராகரித்துவிட்டார் . அதன்படி எதிர்க்கட்சித் தலைவர் இந்த பிரேரனையை ஐ.தே.க.வின் பிரதித் தலைவரான கரு ஜயசூரியாவுக்கு பாராளுமன்றத்தில் சார்பிக்குமாறு எதிர்க்கட்சித்தலைவர் ரனில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியிருந்ததற்கிணங்க 2010 செப்டம்பர் 23 ஆம் திகதி தனி நபர் பிரேரனையாக பாராளுமன்றத்தில்



தொடர்ச்சி 03ம் பக்கம்....

## தகவல் பெறும் உரிமை என்பது என்ன? 2ம் பக்கத் தொடர்ச்சி...

சமர்ப்பிக்கப்பட்டது.
அந்த சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சியின் பிரதம கொரடோவான தினேஷ் குனவர்தன,அரசாங்கம் இத்தகையதொரு சட்டமூலத்தைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்றும் அடுத்த ஆறு மாத காலப்பகுதிக்குள் அந்த சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அறிவித்தார். அது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் கருஜயசூரிய அவரது பிரேரனையை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து சில மாதங்கள் கழிந்த நிலையில் இந்த பிரேரனையை மீண்டும் சமர்ப்பிப்பதற்கு கருஜயசூரியவுக்கு சபாநாயகர் அனுமதி வழங்குவதாக அறிவித்திருந்தார். அதன்படி பிரேரனை 2011 ஜூன் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதாயினும் விவாதத்தின் பின்னர் இந்த பிரேரனை 99 மேலதிக வாக்ககளால் அரசாங்கத்தால் தோற்கடிக்கப்பட்டது. பிரேரனைக்கு ஆதரவாக 32 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

**மீளமைப்பு மற்றும் கற்றறிந்த பாடங்கள் தொடர்பான ஆணைக்குழு தகவல் பெறும் உரிமை சட்டத்தை அமுல்படுத்துமாறு சிபாரிசு செய்திருக்கின்றதா?**
ஆம். மீள்மைப்பு மற்றும் கற்றறிந்த பாடங்கள் தொடர்பான ஆணைக்குழு அதன் சிபாரிசுகளில் தகல் பெறும் சட்டத்தை அமுல்படுத்துவதன் தேவையைப் பற்றி சுட்டிக்காட்டியிருக்கின்றது.
தெற்காசிய பிராந்திய நாடுகளில் தகவல் பெறும் உரிமை சட்டத்தால் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றதா?
ஆம். பாகிஸ்தான், இந்தியா, நேபாலம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனாலும் இலங்கை, மாலைதீவு மற்றும் பூட்டான் ஆகிய நாடுகள் இன்னும் இந்த உரிமையை சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கவில்லை.
தகவல் அறியும் சட்டத்திற்குள் உள்ளடங்குபவர்கள் யார்?
* எல்லா பொது அதிகார சபைகள்
* அரசாங்க அமைச்சர்கள்
* அரசியல் அமைப்பின் கீழ் அதிகாரம் பெறும் நபர்கள் மற்றும் அலுவலகங்கள்
* அரசாங்க திணைக்களங்கள்
* பொதுக் கூட்டுத்தாபனங்கள்
* உயர்கல்வி நிறுவனங்கள்
* 1982 ஆம் ஆண்டின் கம்பனிகளை கூட்டிணைக்கும் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் தமற்றும் அரசாங்க அல்லது பொதுக் கூட்டுத்தாபனமாயினும் அதிகமான பங்குகளைக் கொண்டுள்ள நிறுவனங்கள்
* உள்ளூர் அதிகாரசபைகள்
* பொது நலனை அல்லது சேவை நோக்கத்தை மையமாக வைத்து செயற்படும் தனியார் நிறுவனங்கள்
* மகாணசபைகளால் நிறுவப்பட்டுள்ள எந்த விதமான திணைக்களங்கள் அல்லது நிறுவனங்கள்

தகவல் பெறும் உரிமை தொடர்பான தகவல்களை எங்கிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.
இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இருந்து இந்த தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் செயற்பாடுகள்



“கண்டி நியுஸ்” பத்திரிகை நிறுவனத்தில் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் அதிகாரிகளான கமல் லியனாரச்சி மற்றும் அமீர் ஹுசைன் அகியோர் நடத்திய கலந்துரையாடலின் போது



கொழும்பு பண்டாரநாயக்கா வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான ஊடக கற்கை நெறி தொடர்பான கருத்தரங்கில் பிரார்த்தனா வீரசிங்க விளக்கமளிக்கின்றார்.



ஆர்வத்துடன் வினாக்களைத் தொடுக்கும் மாணவர்கள்...

### இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தற்போதைய பணிப்பாளர் சபை

சிவகுமார் நடேசன் (தலைவர்) ஏனைய உறுப்பினர்கள் வருமாறு: நிமல் வெல்கம, சிங்ஹ ரட்னதுங்க, மனிக் த சில்வா, என்.எம்.அமீன், சுந்தர நிஹதமானி த மெல், சிறி ரணசிங்க, சீதா ரஞ்சனி, ஜி. கொத்திகொட, மற்றும் அஜந்தா அப்புஹாராச்சி.

### இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் செயலகம்

சுகுமார் ரொக்வூட் – பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி, கமல் லியனாரச்சி - சிங்கள மொழி மூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி, எம்.எஸ். அமீன் ஹுசைன் - தமிழ் மொழிமூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி

# இங்கிலாந்து பிரதமர் 'லெவ்சன்' விசாரணைக் குழு முன்னிலையில் ஆஜர்

(இங்கிலாந்தின் அரசியல் வாதிகளுக்கு எவ்வாறு ஊடகவியலாளர்களுடன் இரகசியத் தொடர்புகள் நிலவியது என்பதை அம்பலத்திற்கு கொண்டு வந்த சம்பவம் தொடர்பான விசாரணை இது)

இங்கிலாந்தின் பிரதமர் டேவிட் கெமரூன் அந்நாட்டின் முடிக்குரிய நீதிமன்றத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற "லெவ்சன்" விசாரணைக் குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டு ஏழு மணித்தியாளங்களாக விசாரணை செய்யப்பட்டார். இந்த விசாரணை 2012 ஜுன் மாதம் 04 அம் திகதி நடைபெற்றது. 2011 நவம்பர் 14 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்ற விசாரணைகளின் தொடரில் ஓர் அங்கமாகவே இங்கிலாந்து பிரதமர் இந்த விசாரணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டு விசாரரிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தின் முக்கிய புள்ளிகள் மற்றும் அரசியல்வாதிகளது தொலைபேசிகளை இரகசியமான முறையில் ஒட்டுக் கேட்டல் மூலம் பெறப்பட்ட தகவல்களை ருபர்ட் மேடொப்பின் பத்திரிகையான "நியுஸ் ஒப் த வேர்ல்ட்" பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்டமை தொடர்பாக இந்த விசாரணைக்குழு பலரையும் அழைத்து விசாரணைகளை நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே இந்த விசாரணைக் குழு இங்கிலாந்தின் பிரதமர்களாக இருந்த ஜோன் மேஜர், டொனி பிளயர், கோர்டன் பிரவுன் ஆகியோரையும் அழைத்து விசாரணைகளை நடத்தியிருக்கின்ற நிலையில் அதன் முன்னிலையில் ஆஜராகிய நான்காவது பிரதமர் கெமரூன் ஆவார்.



பிரதமர் டேவிட் கெமரூன்

இங்கிலாந்தின் பிரதமர்கள் 2005 ஆம் ஆண்டு முதல் பிரபல்யம் வாய்ந்த பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் 1404 சந்திப்புக்களையும் கூட்டங்களையும் நடத்தியிருப்பது இந்த விசாரணைகளின் போது தெரிய வந்தது. இது பற்றி கெமரூன் கருத்து தெரிவிக்கையில் அவர் கன்சவேடிவ் கட்சியின் பிரபல்யத்தை நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கும் நோக்கில் இவ்வாறு ஊடகத் தொடர்பை பேண வேண்டியிருந்தது என்பதை உறுதி செய்துள்ளார்.

"நியுஸ் ஒப் த வேர்ல்ட்" பத்திரிகை வெளிவந்த காலப்பகுதியில் இங்கிலாந்தின் அரசியலில் கொடி கட்டிப் பறந்த பிரபலங்கள், பிரபலமான செல்வந்தர்கள், பிரபலம்வாய்ந்த நடிகைகள், உட்பட ஏராளமான முக்கிய புள்ளிகள் பற்றிய அந்தரங்க தகவல்களை இரகசியமான முறையில் பெற்று பிரசுரித்து வந்த பத்திரிகையாகும். 168 வருடங்கள் பழைமை வாய்ந்த இந்த பத்திரிகையை கடந்த வருடம் ஜுன் மாதமளவில் நிறுத்திவிடுவதென்று அதன் உரிமையாளரான ரொபர்ட் மேடொப் முடிவு செய்ததையடுத்தே அப்பத்திரிகையின் நடவடிக்கை தொடர்பான விடயம் இங்கிலாந்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இங்கிலாந்தில் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவொன்று செயற்படும் நிலையில் அந்த ஆணைக்குழு பத்திரிகைத்துறைக்கு வழிகாட்டும் வகையில் ஒழுக்கக்கோவையொன்றை அறிமுகம் செய்திருந்த நிலையில் எவ்வாறு குறித்த பத்திரிகை ஒழுக்கக் கோவையை மீறும் வகையில் செய்தி தகவல் வெளியீட்டை முன்னெடுத்தது என்ற கேள்வி எழுந்திருந்தது. அதன் காரணமாகவே அந்நாட்டின் லெவ்சன் விசாரணைக்குழு அப்பத்திரிகையின் ஆசிரியர் ரொபர்ட் மேடொப் உள்ளிட்ட அதனோடு தொடர்பு வைத்திருந்த பலரை அழைத்து விசாரணை நடத்தியது.

இங்கிலாந்தின் பிரதமர் கெமரூன் மீதான விசாரணையின் போது அவரிடம் பலவிடயங்கள் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டது. குறிப்பாக கெமரூன் ரொபர்ட் மேடொப்பை 10 முறையும் அவரது மகனான ஜேம்ஸ் மேடொப்பை 15 முறையும் ஏன் சந்தித்திருந்தார் என்ற விடயம் தொடர்பாக கூடுதலாக கேள்விகள் கேட்கப்பட்டன. பிரதமராக இருந்த ஒருவர் இப்படிப்பட்ட பத்திரிகை ஒன்றுக்கு சொந்தக்காரரான ஒருவருடன் ஏன் இந்தளவு நெருக்கமான உறவை வைத்திருந்தார் என்பது இங்கு முக்கியமாக கண்டறியப்பட வேண்டிய விடயமாக இருந்தது. ஆனாலும் கெமரூன், அவர் மீதான குற்றச்சாட்டுக்களை கடுமையாக மறுத்துள்ளார். அதே நேரம் இன்னும் பல பாராளுமன்ற உறுப்பினர்களதும் குறுஞ் செய்திகள் தொடர்பாகவும் இந்த விசாரணையின் போது கேள்விகள் எழுப்பப்பட்டன. அத்துடன் கெமரூனின் உதவியாளர்களுள் ஒருவராக கடமையாற்றும் ஜெரமி ஹன்ட் என்பவர் தொடர்பாகவும் விசாரணைகள் நடைபெற்றன. ஆனாலும் பிரதமர் கெமரூன் இவரைத் தொடர்ந்து இவ்விடயம் தொடர்பாக காப்பாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க ஏற்கனவே சில சந்தர்ப்பங்களில் ரொபர்ட் மேடொப் பல பிரதமர்களுடன் நெருக்கமாக இருந்து வந்திருப்பதோடு தேர்தல் காலங்களில் அவர்களோடு தொடர்பு கொண்டு இங்கிலாந்து கடைபிடித்து வந்த வெளியுறவுக் கொள்கையைக் கூட மாற்றியமைக்கும் படி அலுத்தங்களைக் கொடுக்கும் அளவிற்கு செல்வாக்குப் பெற்றிருந்தார் என்ற விடயமும் தெரிய வந்திருக்கின்றது. 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐரோப்பிய யூனியன் தொடர்பாக இங்கிலாந்து கடைபிடித்து வந்த கொள்கையை மாற்றியமைக்கும் படி மேடொப் அப்போதைய பிரதமருக்கு அலுத்தங் கொடுத்தமை தெரிய வந்திருக்கின்றது. அதனால் இத்தகைய தொடர்புகளால் கணிசமான பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் லெவ்சன் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டிருப்பதும் இந்தளவுக்கு விசாரணைகளை கடினமான முறையில் முன்னெடுக்கக் கரணமாகும்.

அதேநேரம் முன்னாள் பிரதமர் ஜோன் மேஜர் குறிப்பிடுகையில் அவர் இந்த பத்திரிகையின் ஆசிரியரோடு தொடர்பை வைத்திருக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். அதற்கு காரணம் "நியுஸ் ஒப் த வேர்ல்ட்" பத்திரிகை அவர் காலத்தில் அவரின் அரசாங்கத்திற்கான ஆதரவை வாபஸ் பெற்றிருந்தது என்பதானால் ஆகும். அத்துடன் தொழிற் கட்சியைச் சேர்ந்த மில்லிபான்ட் குறிப்பிடுகையில் தொலைபேசி ஒட்டுக் கேட்கும் விடயத்தில் ஏனையவர்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகிய நிலையில் அரசியல் வாதிகள் மிகவும் மெதுவாகவே தொலைபேசிகளுக்கு செவிசாய்க்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். காரணம் சில சமயங்களில் எச்சரிக்கையாக நடப்பதென்பதேயாகும்.

**மூன்றாம் தரப்பு முறைப்பாடுகளை ஏற்கும் வகையில்**

(முன்பக்க தொடர்ச்சி...)

விசாரணைக் குற்படுத்தப்பட்டு வந்திருப்பதோடு 2010 ஆம் ஆண்டு 131 முறைப்பாடுகளையும் 2011 ஆம் ஆண்டின் கடந்த 8 மாத காலப்பகுதியில் 104 முறைப்பாடுகளை பதிவு செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை பத்திரிகை வெளியீட்டாளர் அமைப்பு, இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, உழைக்கும் பத்திரிகையாளர் அமைப்பு, இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் இலங்கை இதழியல் கல்லூரி என்பன இதன் பிரதான அனுசரணையாளர்களாவர். அத்துடன் பிரதான ஊடக அமைப்புக்களை உள்ளடக்கிய தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பு (இலங்கை கிளை), முஸ்லிம் ஊடகவியலாளர் அமைப்பு, தமிழ் ஊடகவியலாளர் அமைப்பு மற்றும் ஊடகவியலாளர் தொழிற்சங்க சம்மேளனம் என்பனவும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றன.



Editor: Sukumar Rockwood - PCCSL
Design & Layout by : Priyadharshini - *SLPI*